Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 133

சனிக்கிழமை 08 ஏப்ரல் 2023

பங்குனி 25 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

இருபாலை கானான் சிறுவர் இல்ல விவகாரம்:

## 80 வயதுப் போதகரால் சிறுமிகள் துஷ்பிரயோகம்

### திடுக்கிடும் தகவல்கள் அம்பலம்

யாழ்ப்பாணம், ஏப். 8
இருபாலையிலுள்ள கானான் ஜெப ஆலயத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிய மாணவர் விடுதியில் தங்கியிருந்த சில சிறுமிகள் அங்குள்ள தலைமைப் போதகரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. இதனையடுத்து தலைமைப்போதகரை கைது »11

12 நாள்களாக

## சைவச் சிறுவர் இல்லத்திலிருந்த 2 சிறுவர்களைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 8
திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்லத்திலிருந்த இரண்டு சிறுவர்களை கடந்த மாதம் 27ஆம் திகதி முதல் காணவில்லையென்று தெரிவிக்கப்படுகின்றது. இன்றுவரையில் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது தெரியவில்லை.

சிறுவர் இல்லத்தில் கடந்த 27ஆம் திகதி குழப்பநிலை ஏற்பட்டது. சிறுவர் இல்ல விடுதி நிர்வாகத்துக்கு எதிராக நீதிமன்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்கில், நிர்வாகத்துக்கு எதிராக வாக்குமூலம் வழங்கிய விடுதியின் முகாமையாளர் சிறுவர் நீதிமன்றால் பணி இடை »11

வடக்கில் எவரும்

## வழிபாட்டுச் சின்னங்களை அத்துமீறி வைக்க முடியாது!!!

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

**வடக்கில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் வழிபாட்டு உரிமை உண்டு. அதை எந்தத் தரப்பும் கேள்விக்குட்படுத்த முடியாது. அத்துடன் அத்துமீறி வழிபடவோ அல்லது வழிபாட்டுச் சின்னங்கள் வைக்கவோ முடியாத - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.** »11



## பிள்ளையாரை குடிபெயர்த்து அடாத்தாகக் குடியேறிய புத்தர்

திருகோணமலை, ஏப். 8
திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள 64ஆம் கட்டை மலையில் (பச்சனூர் மலை) அமைக்கப்பட்டிருந்த பிள்ளையார் ஆலயம் அகற்றப்பட்டு விகாரை »11

## தேவாலயங்களுக்கு நேற்றுமுதல் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 8
உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. »11

காங்கேசன் - கொழும்பு

## நேரடி ரயில்சேவை 2024 லேயே சாத்தியம்

கொழும்பு, ஏப். 8
கொழும்பு கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம், காங்கேசன்துறைக்கான நேரடி ரயில் சேவை 2024 ஆண்டு ஜனவரியிலேயே மீள ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வே பிரதிப் பொது »11

தேநீர், பால் தேநீர், ரொட்டி

## யாழ்ப்பாணத்தில் விலை குறைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8
யாழ். மாவட்டத்தில் தேநீர், பால் தேநீர் மற்றும் ரொட்டி ஆகியவற்றின் விலை 10 ரூபாவால் இன்றுமுதல் குறைவடையவுள்ளது. யாழ். நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளின் உணவக உரிமையாளர்களுடனான கலந்துரையாடலின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட் »11

## சரக்குக் கப்பல்சேவை ஆரம்பிப்பதில் தாமதம்!

யாழ்ப்பாணம், ஏப். 8
காங்கேசன்துறைக்கு தமிழகத்தின் சென்னை துறைமுகத்திலிருந்தா அல்லது புதுச் »11

## 3 கிராம் ஐஸுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 8
3 கிராம் 800 மில்லி கிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளுடன் உரும்பிராயைச் சேர்ந்த 24 வயதான சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் கலட்டிப்பகுதியில், யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். (அ-ஓ,26)

## இன்னும் 2 மாதங்களுக்குள் மருந்துத் தட்டுப்பாடு நீங்கும்



### சுகாதார அமைச்சர் உறுதி

கொழும்பு, ஏப். 8
எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் மருந்துத் தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்ய முடியும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். கண்டி - பல்லேகலயில் ஊடகங்களிடம் நேற்றுக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். 'நியாயமான விலைக்கு »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிளாஸ்டிக்குகளுக்கு ஜூன் முதல் தடை!

கொழும்பு, ஏப். 8

ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் பல பிளாஸ்டிக் பொருள்களை இறக்குமதி செய்யத் தடைவிதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், அதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு முறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் தட்டுகள், கோப்பைகள், கரண்டிகள் போன்ற பல பொருள்கள் இதில் உள்ளடக்கப்படுகின்றன. (ம)



கத்தோலிக்கர்களின் புனித வெள்ளி (பெரிய வெள்ளி) வழிபாடுகள் நேற்று பெரும்பாலான ஆலயங்களில் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டன. (ம-113)

# இலங்கையரின் உரிமையை உறுதிப்படுத்த ஒன்றிணைக

## வெளிநாட்டுத் தூதரகங்களிடம் மனு

**கொழும்பு, ஏப். 8**

**இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளை முடக்குவதற்கும், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளைத் தடுக்க ஒன்றிணைய வேண்டும் என்று கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

35 சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து இந்த மனுவைக் கையளித்துள்ளன.

அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றது. அரசாங்கம் தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து 'ஒடுக்குமுறை' சட்டங்களையும் ஜனநாயகத்துக்கும் அமைதிப்போராட்டங்களுக்கும் எதிராகப் பயன்படுத்திவருகின்றது. ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்டதிலிருந்து தற்போதுவரை சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் மாணவத் தலைவர்கள் (போராட்டங்களில் ஈடுபடுவோர்) கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுமாத்திரமன்றி இப்போது அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கும், கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குமான தொழிற்சங்கங்களின் உரிமை புறக்கணிக்கப்பட்டுள்ளது.

மக்களின் தேர்தல் உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனநாயகம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதன் ஊடாக மாத்திரமே பொருளாதார மீட்சியை அடைந்துகொள்ள முடியும் என்று நாம் நம்புகின்றோம். அதேவேளை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தலையிடாதிருக்குமாறும், அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேர்தல்களை நடாத்துமாறும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் வழங்குமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு கண்ணீர்ப்புகை மற்றும் ஆபத்து விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருள்களை இலங்கை அரசாங்கத்துக்கு விநியோகிப்பதைத் தவிர்ப்பதுடன், இலங்கை அரசாங்கத்துக்கு நிதியுதவிகளை வழங்க முன்னர் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மதிப்பீடொன்றை மேற்கொள்ளுமாறு உங்களிடம் கோருகின்றோம் - என்றுள்ளது. (ம)

# எல்லை நிர்ணய அறிக்கை தயார்

கொழும்பு, ஏப். 8

புதிய எல்லை நிர்ணய அறிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. கையளிப்பதற்கான திகதியை பிரதமரிடம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

எல்லை நிர்ணயம் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அரைவாசியாகக் குறைக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் தொகையை அரைவாசியாகக் குறைக்கும் நோக்கில் நியமிக்கப்பட்ட எல்லை நிர்ணயக் குழுவின் அறிக்கை தயார் நிலையில் உள்ளது. இவ்வறிக்கை விரைவில் பிரதமரும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்படவுள்ளது. அதற்கான திகதியொன்றினை ஒதுக்கித் தருமாறு தான் பிரதமரிடம் கேட்டிருக்கிறேன். 341 உள்ளூராட்சி மன்றங்களில் 340 உள்ளூராட்சி மன்றங்களின் எல்லைகள் மீள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கல்முனை மாநகரசபை தொடர்பான வழக்கொன்று நீதிமன்றில் விசாரணையின் கீழ் உள்ளதால் அச்சபைக்கான எல்லை நிர்ணயம் கவனத்திற் கொள்ளப்படவில்லை. எல்லை நிர்ணய குழுவின் அறிக்கை தொடர்பில் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டால் மீளாய்வுக் குழுவொன்றினை நியமித்து அது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அதிகாரமுண்டு - என்றார். (ம)

### பண்டிகைக்காலத்தை முன்னிட்டு

# 7 ஆயிரம் பஸ்கள் விசேட சேவையில்

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள் நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா தெரிவிக்கையில்,

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று முதல் (நேற்று) எதிர்வரும் 18ஆம் திகதிவரை 7 ஆயிரம் பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன. 3 ஆயிரம் தனியார் பஸ்களும், 4 ஆயிரம் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் இவ்வாறு விசேட போக்குவரத்து சேவையில் ஈடுபடவுள்ளன. மேலும் 300 பஸ்கள் அவசர தேவைகளுக்காக தயார் நிலையில் இருக்கும். மத்திய பஸ் நிலையத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்படும் - என்றார். (ச-இ)

## மன்னாரில் மழை

மன்னார் மாவட்டத்தில் இடியுடன் கூடிய மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

மன்னார் மாவட்டத்தில் பிற்பகல் அல்லது இரவு வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாகப் பலத்த காற்று வீசும். எனவே போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ம)

# ஜப்பானில் தடுப்புக்காவலின்போது உயிரிழந்த இலங்கைப் பெண்ணுக்கு மருத்துவம் மறுப்பு

## வீடியோவை வெளியிட்டனர் சட்டத்தரணிகள்

ஜப்பானில் தடுப்புக் காவலில் உயிரிழந்த இலங்கைப் பெண்ணின் மரணத்துக்கு முன்னர், அந்தப் பெண் முகங்கொடுத்த சம்பவங்கள் அடங்கிய காட்சிகள் பெண்ணின் உறவினர்களின் சட்டத்தரணிகளால் வெளியிடப்பட்டுள்ளன.

விசா நிபந்தனைகளுக்கு முரணாக தங்கியதால், விஷ்மா சந்தமாலி என்ற அந்தப் பெண் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், குடிவரவு பணியகத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். 2021ஆம் ஆண்டு மார்ச் 6ஆம் திகதி சந்தமாலியின் உடல்நிலை திடீரென மாற்றம் பெற்று அவர் உயிரிழந்தார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து, விஷ்மாவின் சகோதரி வயோமி நிசங்சலா ஜப்பானுக்குச் சென்று அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். அந்த முறைப்பாட்டில், தனது சகோதரியை அதிகாரிகள் கொன்றுவிட்டனர் என்று குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே விஷ்மா சந்தமாலியின் கடைசி நிமிடங்கள் தொடர்பான காணொலி தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அந்தக் காணொலியில், ஒரு சிறிய இடத்தில் விஷ்மா சந்தமாலி அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார். அவரின் உடல் நிலை மோசமடைந்துள்ளது. எனினும், எந்த மருத்துவ உதவிகளும் அவருக்கு வழங்கப்படவில்லை. தன்னால் சுவாசிக்க முடியாமல் இருப்பதாக விஷ்மா சந்தமாலி அவரைப் பார்த்துக் கொண்டிருந்த இருவரிடம் தெரிவிக்கின்றார். தான் நீண்ட நேரம் உண்ணவில்லை என்றும், தூங்கவில்லை என்றும் அவர் தன் பரிதாப நிலையைக் கூறுகின்றார். எனினும், அவருக்கு எந்த உதவிகளும் வழங்கப்படவில்லை. இதையடுத்து அவர் உயிரிழக்கின்றார். இத்தனை விடயங்களும் அந்தக் காணொலியில் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: சிறுபான்மையினர் இலக்காவர்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை

கொழும்பு, ஏப். 8

**இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமைதியான விதத்தில் விமர்சிப்பவர்களையும், சிறுபான்மைச் சமூகத்தவர்களையும் இலக்குவைப்பதற்கான கடுமையான வாய்ப்புக்களை அரசாங்கத்துக்கு ஏற்படுத்திக் கொடுக்கும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கவலை வெளியிட்டுள்ளது.**




இது தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தென்னாசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்ததாவது:

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அடிப்படை உரிமைகளை திட்டமிட்ட முறையில் மீறுவதற்கான வலுவை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும். தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கண்டனங்கள் எழுந்ததைத் தொடந்து அரசாங்கம் முன்னேற்றகரமான சட்டத்தை கொண்டுவருவதாக உறுதியளித்தது. ஆனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்குப் பதில் உத்தேச பயங்கரவாத தடைச்சட்ட வரைவு பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணத்தை அதிகரித்துள்ளது.

> **ஒன்றுகூடலுக்கான சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கான உரிமைகளை புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கட்டுப்படுத்துகின்றது**

ஒன்றுகூடலுக்கான சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கான உரிமைகளை புதிய சட்டம் கட்டுப்படுத்துகின்றது. உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமைதியான விதத்தில் விமர்சிப்பவர்களையும் சிறுபான்மை சமூகத்தவர்களையும் இலக்குவைப்பதற்கான கடுமையான சட்டங்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்தில்லை - என்றார். (ம)

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

## திரும்பப்பெறுவதாக இருந்தால் எழுத்துமூலமாக அறிவியுங்கள்

### சஜித் இவ்வாறு தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 8

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை திரும்பப் பெறுவதாக இருந்தால் அதை எழுத்துமூலம் அறிவிக்க வேண்டும். அல்லாவிடின் அந்தச் சட்ட வரைவுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைக்ளை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

பொதுமக்களின் எதிர்ப்பைக் கருத்திற்கொண்டு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை திரும்பப்பெற முடிவு எடுக்கப்பட்டாலும், அந்த முடிவில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனெனில், இதற்கு முன்னரும் மக்களால் எதிர்க்கப்பட்ட பல பிரேரணைகளை அரசாங்கம் திரும்பப் பெற்றது. எனினும் பின்னர் தனது பெரும்பான்மையைப் பயன்படுத்தி அவற்றை நிறைவேற்றிக்கொண்டது. எனவே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அரசாங்கம் திரும்பப் பெறுவதாக இருந்தால், அது தொடர்பில் எழுத்தில் அறிவிக்க வேண்டும். மாறாக, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டால், புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தில் உள்ள ஜனநாயக விரோத அம்சங்களை, நீதிமன்ற நடவடிக்கை ஊடாக நீக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் கூட்டணி என்பன நடவடிக்கை எடுக்கும். அதற்கு மேலதிகமாக புதிய சட்டத்தை தோற்கடிப்பதற்கு மக்கள் சக்தி திரட்டப்படும் - என்றார். (ம-44)

## திருத்தம் வேண்டாம் முற்றாக நீக்குங்கள்!

### பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு சிவில் அமைப்புக்கள் போர்க்கொடி

கொழும்பு, ஏப். 8

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மீதான பரிசீலனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், திருத்தங்கள் வேண்டாம் என்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்றும் சிவில் சமூக அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் தேசிய சமாதானப் பேரவையின் தலைவரும், சிவில் சமூக செயற்பாட்டாளருமான கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்ததாவது:

அரசாங்கத்தால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டவரைவின் உள்ளடக்கம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் பின்னணியில், அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தாமதிக்கப்போவதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஆனால், அந்தச் சட்டவரைவில் திருத்தங்களை மேற்கொள்ளாமல், முற்றுமுழுதாகக் கைவிடுவதே சிறந்த நடவடிக்கையாக இருக்கும்.

உத்தேச பயங்கரவாதத்தடைச்சட்ட வரைவானது 97 பக்கங்களைக் கொண்டிருக்கின்றது. அதில் திருத்தங்களை மேற்கொள்வது கடினமான செயல். இந்தச் சட்டவரைவின் அடிப்படையில், நீதிவானை மீறிய வகையில் தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடிய அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அனைத்து அதிகாரங்களும் நீதிவானுக்கு வழங்கப்படும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம் - என்றார். (ம)

## கடந்த மாதத்தில் 568 மில். டொலர்

கொழும்பு, ஏப். 8

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின்படி, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் கடந்த மாதம் 568.3 மில்லியன் டொலரை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி, இந்த வருடத்தின் முதல் 3 மாதங்களில், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் ஆயிரத்து 413.2 மில்லியன் டொலரை இலங்கைக்கு அனுப்பியுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)




கொஞ்சக்காலத்துக்கு முதல் தடுக்கி விழுந்த இடமெல்லாம் சமாதான நீதவான்களைப் பார்க்கக்கூடியதா இருந்திச்சு. ஒரு காலத்துல ஊரில ஒண்டிரண்டு பேர்தான் சமாதான நீதவான். ஆனால் பிறகு அரசியல் சிபார்சில இப்ப ஒவ்வொரு ஒழுங்கைக்கும் நாலைஞ்சு சமாதான நீதவான்கள் இருக்கினம். இண்டைக்கு கதைக்கப் போற விசயம் அதில்லை. இந்தச் சமாதான நீதவான்கள் மாதிரி இப்ப எங்கட ஊரில 'திடீர் கலாநிதிகள்' உருவாகிக் கொண்டு வருகினம்.

கலாநிதிப் பட்டம் எடுக்கிறதெண்டால், அதுக்குப் பட்டங்கள் எல்லாம் எடுத்து, ஆய்வுகள் எல்லாம் செய்து நிறையக்காலம் மினக்கெட்டாத்தான் முடியும். ஆனால் இப்ப அது சிம்பிள் விசயமாப் போட்டுது. போன மாசம் யாழ்ப்பாணத்தில ஒரு கலியாண மண்டபத்தில கனபேர் இப்பிடி கலாநிதிப்பட்டங்களை வாங்கிக் கொண்டு, பேஸ்புக்கிலயும் இப்ப தங்கட பேருக்கு முன்னால 'கலாநிதி' எண்டு கலாதியாப் போட்டு, லைக்ஸை அள்ளிக்கொண்டிருக்கினம். திடீர் தோசை மா, திடீர் புட்டு மா எண்ட மாதிரி இப்பிடி திடீர் கலாநிதியா வாறதுக்கு கனக்கக் கஷ்டப்படத் தேவையில்லையாம். அம்பதாயிரத்தை அந்த நிகழ்வை நடத்திறவைக்கு குடுத்தால் சரியாம். சேர்டிபிக்கெட்டும் அடிச்சு, ஒரு அம்பது அறுபது பேர் சேர்ந்தவுடன ஒரு கலியாண மண்டபத்தில விழா எடுத்து உங்களுக்கு 'கலாநிதிப்பட்டமும்' தந்து அனுப்ப ஆக்கள் ரெடி. முந்தி வெளிநாட்டுக்கு அனுப்பிற ஏஜென்ஸி மாதிரி இப்ப கலாநிதிப்பட்டம் குடுக்கிறதுக்கும் ஏஜென்ஸிமார் இருக்கினமாம்.

இப்பிடி திடீர் கலாநிதிப்பட்டத்தை காசுக்கு குடுத்த தமிழகத்தினர் ஒரு பெரிய பணக்காரப்புள்ளி இப்ப தலைமறைவாகிட்டார். அவரிட்ட கலாநிதிப்பட்டம் வாங்கின வைகைப்புயல் வடிவேலு, யூரியூப் சுதாகர் எல்லாம் தங்களுக்கு கிடைச்சது போலிப்பட்டம் எண்டது தெரிஞ்சு அந்தக் கலாநிதிப்பட்டத்தையே தூக்கி எறிஞ்சிட்டினமாம்.

எல்லாருக்கும் பட்டம், பதவிக்கு ஆசை இருக்கும் தான். அதுக்காக இப்பிடி போலியான பட்டம் குடுக்கிறவையிட்ட காசைக்கட்டித்தான் அதை வாங்க வேணுமோ? அப்பிடியொரு பட்டம் வேணும் என்டால் அதைப் படிச்சு எடுக்கோணும். இல்லாட்டி மானியங்கள் ஆணைக்குழுவின்ர அனுமதியுள்ள நிறுவனங்கள் வழங்கோணும். அதைவிட்டிட்டு காசைக் கட்டி, போலிக் கலாநிதிப்பட்டத்தை வாங்கி ஏமாறாதையுங்கோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறையில் நூலகம் திறப்பு!

**யாழ்ப்பாணம், ஏப். 8**

**'ஒரு நூலகம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' எனும் கூற்றுக்கமைய யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகமொன்று இன்று சனிக்கிழமை திறக்கப்படவுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் இந்தச் சிறைச்சாலை நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பிரதம விருந்தினராகப் பங்கேற்று நூலகத்தை அங்குரார்ப்பணம் செய்துவைக்கவுள்ளார். நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பரா்மரிப்பையும், ஆலோசனையும் யாழ். பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளது. சிறைச்சாலையிலுள்ள கைதிகள் சிறை வாழ்க்கையில் பொருத்தமான தீர்மானங்களைத் தாமே எடுப்பதற்கும், தமக்குத் தேவையான தகவல்களை தாமாகவே தேடிச் சென்று பெற்றுக் கொள்ளுவதற்கும் ஏற்ப நூலகத்தின் சேவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், 'கைதிகள் தமது நேரத்தை பொருத்தமான வகையில் முகாமை செய்வதற்கும் உள ஆரோக்கியத்தை சிறந்த முறையில் பேணவும் நூலக வாசிப்பு உறுதுணையளிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது' என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# இன்றைய நாள்

## (ராசிபலன்)



**மேடம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்னைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்** உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு நீங்கம். செலவு செய்ய நேரிடும்.

**கடகம்** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபட உகந்த நாள். செலவுகள் ஏற்படும். ஆதாயம் உண்டாகும். பி உற்சாகமான சூழ்நிலை ஏற்படும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளுக்கு மிகவும் அனுகூலமான நாள். உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். சிலருக்கு திடீர் பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகரிக்கும்.

**மகரம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். செலவுகளைச் சமாளிக்க நேரிடும். 'உற்சாகம் பிறக்கும்.

**கும்பம்** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவுகளுக்காக செலவு செய்ய வேண்டி ஏற்படும்.

**மீனம்** எந்த முடிவையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும்.

# திருக்குறள் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 8

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு அகில இலங்கை திருவள்ளுவர் மன்றமும் உரும்பிராய் கற்பகவிநாயகர் கலாசார மண்டபத்தினரும் இணைந்து மாணவர்களுக்கிடையிலான திருக்குறள் மற்றும் ஆன்மிகம் சார் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு திருக்குறள் மனனப் போட்டிகளும் தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கு எழுத்துப் பரீட்சைகளும் இடம்பெறவுள்ளன. விண்ணப்பப் படிவங்களை கற்பகவிநாயகர் கலாசார மண்டபத்தில் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும் ஏனைய மாணவர்களுக்கு 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கும் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும்.

போட்டிகளில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு தங்கப்பதக்கமும் அடுத்து 5 இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. பரிசில்கள் யாவும் எதிர்வரும் 23ஆம் திகதி கற்பகவிநாயகர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் திருவள்ளுவர்தின விழாவில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14,9)

# இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 8

கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியற்துறை விரிவுரையாளர் அ.பெளநந்தி எழுதிய சிறுவர் பாடல் தொகுதியான 'வளர்நிலா' மற்றும் ஈழத்துப் பெண் கவிஞர்கள் குறித்த பார்வையான 'இன்னபடி முரணிலை' ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா, இன்று சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு துன்னாலை மத்தி கரவெட்டியில் அமைந்துள்ள கோவிற்கடவை சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் க.பரணீதரன், நூலின் நயவுரைகளை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார் மற்றும் யாழ்.பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ம-14,66)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 8

துர்க்கா விளையாட்டுக்கழக ஸ்தாபகர் தம்பித்துரை சிவராஜாவின் ஞாபகார்த்தமாக மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் துர்க்கா விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்தும் குருதிக்கொடை முகாம், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள மக்கள் முன்னேற்றக்கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தவக்காலத்தை முன்னிட்டுக் கோப்பாய் தெற்கு தூய மரியன்னை ஆலய இளையோர் மன்றத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமொன்று இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை மேற்படி ஆலய முன்றிலில் நடைபெற உள்ளது. (ம-14,66)

# தொழில்நுட்ப பயில்களம்!

யாழ்ப்பாணம், ஏப். 8

சிறகுகள் அமையத்தின் ஏற்பாட்டில், தொழில்நுட்பம்சார் பயில்களத்தின் ஒரு பகுதியாக விக்கிப்பீடியா சார்ந்த உரையாடல் 'விக்கிப்பீடியா வெளியினிலே' எனும் தலைப்பில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு இணைய வழியில் இடம்பெறவுள்ளது.

விக்கிப்பீடியா தளத்தைக் கையாளும் வகையிலான வழிகாட்டல்கள் இதன்போது வழங்கப்படும். சூம் செயலி இலக்கம் 823 4846 7118, கடவுச்சொல் 2023 என்பவற்றினூடாக நிகழ்வில் இணைந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-14,66)

# நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஏப். 8

அமரர் சுந்தரம் டிவகலாலாவின் நினைவேந்தல் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (ச)

# விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி ஏப். 8

இரண்டு மோட்டார்சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து சம்பவித்துள்ளது. இரு யுவதிகளும், ஒரு முதியவருமே இவ்வாறு காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-9)

# விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 8

புன்னாலைக்கட்டுவன் தெற்கு கணேச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி, நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் [illegible] கல்விப் பணிப்பாளர் [illegible] கலந்துகொள்ளவுள்ளார். (ம-14,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அபிவிருத்தி என்பதேது?

'காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்கும் இடையிலான பயண இடைவெளி 56 கடல்மைல். ஆனால், தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான பயண இடைவெளி 18 கடல்மைல். ஆக, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே மிகக்குறைந்த செலவில் சாத்தியமாகக் கூடிய கப்பற்பாதையாக தலைமன்னார் – இராமேஸ்வரம் என்ற வழித்தடம் இருக்கின்றபோது, காங்கேசன்துறை – காரைக்கால் இடையிலான வழித்தடத்தைத் தெரிவுசெய்தமை தவறு' என்று கண்டித்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினரான சாள்ஸ் நிர்மலநாதன். தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையிலான கடற்பாதை இருக்கையில், அதைவிடவும் மூன்று மடங்கு செலவுகூடிய பயணப்பாதையை எதற்காக ஆரம்பிக்கவேண்டும்? என்றும் அவர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

சாள்ஸ் நிர்மலநாதன் வன்னி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். எனவே, தான் சார்ந்த பிரதேசத்தின் அபிவிருத்தி அவருக்கு மிகமிக முக்கியமானது, அதில் இம்மியும் தவறு சொல்வதற்கில்லை. அத்துடன், அவர் வெளிப்படுத்தியிருக்கும் புள்ளி விவரங்களும், பூகோளத்தை அடிப்படையாகக் கொண்ட தர்க்கங்களும் முழுக்கமுழுக்க நியாயமானவை. ஆனால், தன் கருத்தை – நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தியிருக்கும் – 'நெறிப்படுத்தியிருக்கும்' விதம்தான் கவலைக்கும், சிந்தனை வறட்சிக்கும் உரித்தானதாக அமைந்திருக்கின்றது.


இந்தியா பரந்துவிரிந்த ஒரு தேசம். எனவே அந்த நாட்டுக்கு இலங்கை ஊடாக இருவேறு கப்பல்பாதைகள் இருப்பதில் என்ன தவறு? இத்தனைக்கும் இராமேஸ்வரத்துக்கும் காரைக்காலுக்கும் இடையிலான இடைவெளி சுமார் 300 கிலோமீற்றர்கள். அதாவது யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான தூரமிது. எனவே, 'காங்கேசன்துறை – காரைக்கால் இடையிலான கப்பல்சேவை ஒரு புறம் நடக்கட்டும். தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையிலான கப்பல்சேவை விரைந்து ஆரம்பிக்கப்படவேண்டும். அதன் மூலம் மன்னார் அபிவிருத்தி அடையும்' என்று சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்தியிருந்தால் அவருடைய கருத்து ஆத்மார்த்தமானதாகவும் ஆழம் மிக்கதாகவும் அமைந்திருக்கும். அதைவிடுத்து, காங்கேசன்துறை – காரைக்கால் கடற்பயணம் தொலைவு மிக்கது. அதுவேண்டாம் தலைமன்னார் – இராமேஸ்வரம் ஊடான கடற்பயணத்தை ஆரம்பியுங்கள் என்று ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் பொரிந்துதள்ளுவதானது கொஞ்சமும் பொருத்தம் இல்லாத செயலும் அபத்தமுமாகும். கூடவே பிரதேசவாதத்தையும் இந்தக்கருத்து சுமந்து நிற்கின்றது.

எல்லாவற்றையும் விட, ஒரு துறைமுகமோ அல்லது விமான நிலையமோ அதற்கும், மறுமுனைப் பயணப்புள்ளிக்கும் இடையிலான பயண இடைவெளியை மட்டுமே கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்படுவதில்லை. வடக்கில் வவுனியாவைத் தவிர இதர இரு மாவட்டங்களான முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி என்பன ஒப்பீட்டளவில் மன்னாரை விடவும் யாழ்ப்பாணத்துக்கு அருகாகவுள்ளன. யாழ்ப்பாணத்தின் சனத்தொகை ஏனைய மாவட்டங்களை விடவும் மிக அதிகம். எனவே, பயண இடைவெளி என்பதற்கப்பால் 'துறைமுகப்பயன்பாடு' என்பதும் இங்கு நோக்கப்பட வேண்டிய விடயமே. ஆதலால், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வெறும் பயண இடைவெளியை மட்டுமே மையப்புள்ளியாகக் கொண்டு கருத்துக்களைப் பகிராமல், துறைமுகப்பயன்பாடு, துறைமுகத்தை அடைவதற்கான உள்ளூர் மக்களின் அலைச்சல், அதற்கான பயண நேரம் என்பவற்றையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

நிற்க, எந்தவொரு நாடு தனக்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை – போக்குவரத்துக்களை வலுவாக்குகின்றதோ அந்த நாட்டால்தான் இன்றைய 'வர்த்தக' உலகில், தன்னை ஆரோக்கியமாக நிலைநிறுத்தமுடியும். அதிலும், நில வழியாக வேறெந்த நாட்டுடனும் தொடர்பில்லாமல் இருக்கும் ஒரு தீவான இலங்கை, அருகிலுள்ள பிராந்திய வல்லரசான இந்தியாவுடன் 'வர்த்தகத்துக்காக' கடல்வழியாக இறுகப் பிணைக்கப்படுவதென்பது தவிர்க்க முடியாததாகின்றது. ஆதலால், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கோரிக்கையைச் செவிமடுத்து, எவ்வளவுக்கெவ்வளவு விரைவாக தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரம் நோக்கி பயணிகள் படகு புறப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இலங்கையின் பொருளாதாரத்துக்கும் அது உதவும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இரு கப்பல்பாதைகள் இருந்தால் அதுவொன்றும் அவ்வளவு பெரிய தெய்வக்குற்றம் அல்ல.

### நாளொரு நல்வார்த்தை

இந்த உலகத்தில் வேறு எவருடனும் நீ உன்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டாம். அவ்வாறு நீ செய்தால் நீ உன்னை அவமதித்துக் கொள்வதாகப் பொருள். – அன்னை தெரேசா –




## இலங்கையில் இந்துமத அழிப்பு: டெல்லியில் நேற்றுப் போராட்டம்

கொழும்பு, ஏப். 8

**இலங்கையில் இந்து மதம் திட்டமிடப்பட்ட வகையில் அழிக்கப்படுகின்றது என்று தெரிவித்தும், இலங்கைத் தமிழ் இந்துக்களுக்கு நீதிகோரியும் இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து நேற்றுப் போராட்டமொன்றை நடத்தியுள்ளன.**

இந்தப் போராட்டத்தை ஒழுங்கமைத்த அமைப்புக்கள் தெரிவித்ததாவது:
இலங்கையில் கட்டுமானப் பணிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் என்ற பெயரில் பழங்கால இந்து ஆலயங்கள் அரசாங்கத்தால் அழிக்கப்பட்டு வருகின்றன. பழங்கால இந்து ஆலயங்களை இலங்கை அரசாங்கம் அழிப்பதானது தமிழ்ச் சமூகத்தின் மீதான கலாசாரப் படுகொலையையே காட்டுகின்றது. இது இந்துக்களுக்கும் இந்தியாவுக்கும் தீங்கிழைக்கும் செயல். எனவே இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை இந்தியப் பிரதமர் மோடி கடுமையாக ஆட்சேபிக்க வேண்டும் - என்றன. (ம)

## எக்ஸ்பிரஸ் பேர்ளுக்கு அருகில் ஆய்வுப்பணி!

கொழும்பு, ஏப். 8
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலுக்கு அருகில் சென்று ஆய்வுகளை நடத்துவதற்கு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் நாரா நிறுவனம் இணைந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று சுற்றாடல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அறிவுறுத்தியுள்ளது.
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்புக்களைப் பெறுவது தொடர்பான கலந்துரையாடல், சுற்றாடல் பற்றிய மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மன்னப்பெரும தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே, கப்பலின் எஞ்சியுள்ள பாகங்களுக்கு அருகில் சென்று ஆய்வுசெய்து இழப்பீடுகளை மதிப்பீடு செய்வது தொடர்பான மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள நிபுணத்துவக் குழுவுக்கு அவசியமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ம)

## எரிபொருள் விநியோகம்: கண்காணிப்பு இறுக்கம்!

கொழும்பு, ஏப். 8
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான எரிபொருள் தாங்கிகள் அனைத்தும் ஜி.பி.எஸ். கருவிகள் மூலமாகக் கண்காணிக்கப்படவுள்ளன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எரிபொருள் தாங்கிகள் அனைத்தையும் ஜி.பி.எஸ். கருவிகள் மூலம் கண்காணிக்கும் முறைமை எதிர்வரும் 15ஆம் திகதிமுதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அனைத்து எரிபொருள் நிலையங்களும் குறைந்தபட்சம் 50 வீதம் எரிபொருளை கையிருப்பில் வைத்திருக்க வேண்டும். கியூ.ஆர். ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்கத் தவறிய 40 எரிபொருள் நிலையங்களின் உரிமத்தை இடைநிறுத்த முடிவு எட்டப்பட்டுள்ளது - என்றார். (ச)

### நாளை

09.04.2023
ஞாயிற்றுக்கிழமை
பங்குனி 26

சுபநேரம் : 09.07 - 10.37
ராகுகாலம் : 04.37 - 06.07

சாங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். பொன்னாலையைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் முத்தன் இராசரத்தினம்

(வெற்றிலைக் கடை- சங்கானை)



எங்க அப்பா குரல் கேட்காது
ஐ - ஐந்து ஆண்டாச்சு...
எங்க அப்பா முகம் காணாது
எங்க கண்ணிரண்டும் குளமாச்சு...
எங்க அப்பாவை தினம் நினைச்சு
எங்கும் தேடி அழும் உளமாச்சு....

எத்தனை துன்பங்கள் வந்தாலும்
எப்படி எதிர்கொண்டு வெல்வது
என்ற மந்திரம் பல கற்றுத் தந்தீரே...
எங்க ஊருக்கும் காவல் தெய்வம் ஆனீரே..!

அப்பா நம் வாழ்க்கையின் ஆணிவேர்...
அப்பா நாம் இழந்திடா பொக்கிஷம்...
தவறத்தான் விட்டுவிட்டோம் மாணிக்கத்தை
இனி என்றுதான் பெற்றிடுவோம் (ராஜ)
இரத்தினத்தை...!

உன்னை போன்று தோள் கொடுக்கும்
தோழன் ஒருத்தன்
இந்த உலகத்தில் யாருக்கு தான்
கிடைத்திருக்கும்...?
அந்த தெய்வமான வைரவ கடவுளுக்கும்
கையிலேந்த வாள் கொடுத்த வீரனன்றோ...
நம் தந்தையவர் நண்பனுக்கும் மேலானவர்...
இன்னும் சொல்லப் போனால்
தெய்வத்திற்கே ஈடானவர்...!

அவர் போன பின்னே பூட்டி வைத்த பெட்டி நிறைய
அவர் விட்டுச் சென்ற ஓராயிரம் நினைவு
சின்னங்கள் – அம்மா
பொத்தி பொத்தி பேணி வைத்த
பொக்கிஷங்களாம் - அதை
திறந்து பார்க்கா தினங்கள் இல்லை
இன்று வரைக்கும்...!
எட்டி எட்டி பாத்திடவே எத்தணிக்குதே
எண்ணம் மட்டுமன்றி கண்ணின் ஓரம்
ஓர் துளியுமே...!

இடைக்கிடை கடையில சாப்பாடும் கனக்க தான்
கட்டியே எடுத்து வந்து
தட்டி தட்டி நம்மையெல்லாம் எழுப்பி விட்டு
கெஞ்சி கொஞ்சி பாசத்தோடு ஊட்டி விடுவார்...
அப்போ பக்குவமாய் பாதுகாப்பாய் வளர்த்தாரே...
இப்போ வாய் ருசிக்க வாங்கி தர
அவர் இல்லையே...

கல்வி உயிர் மூச்சு என்றார்...
கடல் தாண்டி படிக்க வைச்சார்...
கையளவு மனசுக்குள்ள
உலகமா தா எங்கள வைச்சார்...
வறுமையை மறச்சு வைச்சு
அருமையா வளத்தெடுத்தார்...
கடுமையா அப்பா உழைச்சு
பெருமையைச் சேத்து வைச்சார்...

பட்டதாரி ஆகியே விட்டோம் - அந்த
பெருமை பேச நீங்க இல்லையே...
பல நாடு சுத்தியும் வந்தோம் - உங்க
முகம் போல எங்கும் இல்லையே...
போட்டோவில சிரிச்சு கொண்டு - இப்ப
வாழ்த்துராரே எங்க அப்பா....!

உங்க மூச்சை தான் காற்றும் திருடியதோ
உங்க பேச்ச தான் கடலும் பதுக்கியதோ
நாங்க உங்கள பாக்க எங்கே வர...?
எங்க உயிரையும் தருவம் எப்ப வர...?
நெஞ்சோடு தான் நாம் சாயனும்...
தோளோடு தான் நாம் தூங்கனும்..

செக்குமாடு போல தான்
நித்தம் சுத்தி உழைச்சீங்களே...
ஒத்தமாட்டு வண்டியா
மொத்த பாரம் சுமந்தீங்களே...
சுவட்டை கட்டி வளர்த்தீங்களே...
குருவி போல பறந்தீங்களே...
போட்டோக்கு போஸ் குடுத்து
சாமியா தான் போனீங்களே..!

என் தாலிக்கும் பூவுக்கும் பொட்டுக்கும்
பேரழகு தந்த என் ராசா...
பிள்ளை செல்வங்கள் பல கிட்டி
அன்னையாய் வரம் பெற்று
உன் கரம் பற்றியே வாழ்ந்தேனே...!
கோபுரத்தை கட்டி ஐயா... - நீ
பெத்தவைய குடியிருத்தி...
கோபுரம் இங்கிருக்கு நீ – குயில்
பறந்த மாயம் என்ன...???
என் மன்னனை பறி கொடுத்திட்டு
நித்த நித்தமும் உருக்குலைந்து போய்
உன்(நம்)கதை பேசி வாழ்ந்து போகிறேன்..
வெள்ளை சேலையில் என்னை
பார்க்காதே...
மீண்டும் செத்து தான் நீ போவாயே....!!!



பிறப்பு 29.08.1944 இறப்பு 08.04.1998

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி: இராசரத்தினம் கண்ணம்மா (சங்கானை)
மற்றும் பிள்ளைகளான :
ஸ்ரீகாந்தராஜா புவனேஸ்வரி குடும்பம் (சங்கானை)
உதயகுமார் ஜீவமலர் குடும்பம் (சங்கானை)
ஜெகன் கலாநிதி குடும்பம் (பிரான்ஸ்)
இராசரத்தினம் ஜெயக்குமார் (சங்கானை)
மனோகரன் சுஜாதா குடும்பம் (வசாவிளான்)
தயாளகுமார் ராதிகா குடும்பம் ([illegible])
அஜன் நிஷாந்தி குடும்பம் (சங்கானை)
கார்த்தீபன் நிரோஷா குடும்பம் (லண்டன்)

(CS/24218)AH-1

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 . 03 . 1944



இறப்பு 08 . 04 . 2017

## அமரர்
## மாணிக்கவாசகர் திலகவதி

நினைவெல்லாம் என்றும் நீயே
அம்மா!
தினமுன்னை தேடி தேம்பும்
நினைவுகள்
வான வெளியில் தான் சென்று
மறைந்தாயோ
எந்நாளும் எம் நினைவில் நீயே
அம்மா!

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

பாசமுடன்
குடும்பத்தினர்

(cr 39617) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 05 . 2005



மறைவு 05 . 04 . 2023

## மோகனதாஸ் கிஷோத்மன்

கே.கே.எஸ். வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவிலை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மோகனதாஸ் கிஷோத்மன் கடந்த (05.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மோகனதாஸ் கௌரி தம்பதியரின் பாசமிகு மகனும், மதுஷனா, ஜானுகா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கணேஸ் மற்றும் அன்னலட்சுமி, காலஞ்சென்ற வடிவேலு மற்றும் இராசம்மா ஆகியோரின் பேரனும், பிறேமதாஸ் - வதனி ஆகியோரின் பெறா மகனும், றஜனி - பாலச்சந்திரன், காலஞ்சென்ற லோகினி - ஜெகநாதன் ஆகியோரின் மருமகனும், சிறிதரன் - ராகினி மற்றும் கஜேந்திரன் - சுபாஹறி, விஜேந்திரன் (கோபி) - மிரா, குமரேந்திரன் ஆகியோரின் மருமகனும், வனஜா- மோகன், ரஜிதா - கமல்ராஜ் ஆகியோரின் பெறாமகனும், சஜீபன், விதுர்சன், வேனுகன், துளசிகா, கஜானா, ஜதுகேசன் லிதிகேஸ் சாஜித், லிசானா, கவினாஸ், சுவர்ணி லக்சுஜி, பிரணீத் ஆகியோரின் மைத்துனரும், கவின்சன், அனுஷ்கா, அர்வி, விஷ்ணி, ஆதிரா ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 48 444 28

(CS 24338) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு விடப்படும்

அச்சுவேலி நவக்கிரியில் சகல வசதிகளுடன் கூடிய இரண்டு அறைகளையுடைய புதிய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகொள்ளும் நேரம் : இரவு 8.00 மணிக்குப்பிறகு

**021 223 2976**

## பெண் வேலையாள்கள் தேவை

ஊர்காவற்றுறையில் உள்ள அழகுசாதன பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண் வேலையாட்கள் தேவை.

ஆரம்ப சம்பளம் - 30,000/-

**077 067 4452**

## அறிவித்தல்

### வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ + து)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் 46 (1) பிரிவின் கீழ் பரிசோதனை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கொத்தணியுடன் தொடர்புடைய அங்கத்துவ சங்கங்கள் கொத்தணியில் அக்கறை உடையவர்கள் கொத்தணியின் செயற்பாடுகள் தொடர்பில் மேற்படி 46 (1) பரிசோதனை தொடர்பான தகவல்கள் தரவிரும்பின் 17.04.2023, 18.04.023, 19.04.2023 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை தகவல்களை தந்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**46 (1) பரிசோதனை உத்தியோகத்தர்கள்** (cr.38363) (N-1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 - 11 - 1940

மறைவு 05 - 04 - 2023

## சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரி அவர்கள் கடந்த (05.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை சின்னம்மா தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி சின்னத்தங்கம் தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், சண்முகேஸ்வரன், இராஜேஸ்வரி(சுவிஸ்), ரேணுகேஸ்வரி, காலஞ்சென்ற சுந்தரேஸ்வரன் மற்றும் கோமளேஸ்வரி, வெங்கடேஸ்வரன்(சுவிஸ்), கணேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசீலாதேவி, குகானந்தன்(சுவிஸ்), முத்துராசா, பிலேந்திரன், பாமினி (சுவிஸ்), வேதிகா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், நிதர்சன் (பிரான்ஸ்), நிதுர்சன், சுந்தரிஷி - சயந்த் (சுவிஸ்), பிரியந்தி - லோஷனன் (லண்டன்), சிவாத்மிகா, சுபாகி, ஹறிணி, நிகிதா, இந்துஜன் (சுவிஸ்), சுந்தரேஸ்வரன் (சுவிஸ்), ஸ்ரீராம் (சுவிஸ்), வைஸ்ணவி (சுவிஸ்), சுவாகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், லண்டனில் வசிக்கின்ற தக்ஷன், அக்சதா, லதுசன், அதித்தி ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசாத்தி, சிவபாதம், மகேஸ்வரி, சண்முகநாதன், ஞானேஸ்வரி, மகாதேவன், பரமேஸ்வரி, ஞானேஸ்வரன் மற்றும் திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, சோமசுந்தரம், இராசமணி, அம்பலவாணர், அருளானந்தம், முத்துலிங்கம், கணபதிப்பிள்ளை மற்றும் ஞானமணி, இரத்தினேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கே.கே.எஸ் வீதி,**
**சிந்துஜன் ஒழுங்கை**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்** (CS 24347)(K-1)

# இந்தியா - இலங்கை கடற்படைகள் கூட்டுப்பயிற்சி

கொழும்பு, ஏப். 8

இந்தியா மற்றும் இலங்கை கடற்படையினருக்கு இடையிலான பத்தாவது வருடாந்த கடல்சார் இரு தரப்பு பயிற்சியான 'சிலிநெக்ஸ் பயிற்சியின்' இரண்டாம் கட்ட கடல்சார் பயிற்சிகள், கொழும்புக்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் நேற்று ஆரம்பமாகின. இவை நாளையுடன் நிறைவடையவுள்ளன.

துறைமுக மட்டத்திலான பயிற்சிகள் கடந்த 3ஆம் திகதியிலிருந்து 5ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றன.

இந்தியக் கடற்படையானது அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்புக் கடற்படைக் கப்பல் மற்றும் ரோந்துக் கப்பல் ஆகியவற்றுடன் பயிற்சியில் பங்கேற்றது.

இதற்கு மேலதிகமாக இந்திய கடற்படையின் உலங்குவானூர்தி மற்றும் கடல் ரோந்துப் பணிகளுக்கான டோனியர் விமானமும் இலங்கைக் கடற்படையின் டோனியர் விமானம் மற்றும் பெல் 412 ரக உலங்குவானூர்தி ஆகியவையும் பயிற்சியில் பங்கேற்றுள்ளன.

கடந்த ஆண்டு இந்தப் பயிற்சிகள் இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-இ)

### நிர்வாகிகள் தெரிவு

சாவகச்சேரி, ஏப். 8

தென்மராட்சி பிரதேச சமூர்த்தி மட்ட அமைப்பின் நிர்வாகிகள் தெரிவு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

தலைவராக கைதடி வலயத்தில் ச.கீர்த்தனா, உப தலைவராக கொடிகாமம் வலயத்தில் சி.சறோஜினிதேவி, செயலாளராக சாவகச்சேரி வலயத்தில் உ.அருஜா, உதவிச் செயலாளராக வரணி வலயத்தில் அ.சிந்துஜா, பொருளாளராக கொடிகாமம் வலயத்தில் இ.குமாரவடிவேல் உட்பட 11 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். (ச- 9)

## யாழ்.கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி

**நேரம் -**
காலை 5.30 மணியளவில்

**காலம் -**
15.04.2023 சனிக்கிழமை

**இடம் -**
புனித சாள்ஸ் மகாவித்தியாலய முன்றலில் ( பிரதான வீதி)

**072 350 4218, 077 544 2468**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 15 . 02 . 1947

விண்ணில் 09 . 03 . 2023

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி 09.03.2023 அன்று
மீளாத்துயில் கொண்ட எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகமுத்து சந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.04.2023) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**புன்னாலைக் கட்டுவன் வடக்கு,**
**திடற்புலம்.**

**குடும்பத்தினர்** (cs 49909) (N-1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 18 . 10 . 1940

விண்ணில் 08 . 04 . 2022

### அமரர் திருமதி
## றீற்றா லூட்ஸ்மேரி ஜோர்ஜ்

"விழிப்பாயிருங்கள் நம்பிக்கையில் நிலைத்திருங்கள்.
துணிவுடன் நடந்துகொள்ளுங்கள்.
வலிமையுடன் செயற்படுங்கள்"
(1கொரிந்தியர் 16:13)

எங்கள் அனைவரையும் பாசத்துடனும், பரிவுடனும் காத்து
சிறந்த முறையில் வளர்த்த நீங்கள்
எம்மை விட்டு மறைந்து சென்று
வருடம் ஒன்றும் கடந்து விட்டது.
ஓராண்டு கடந்து விட்டாலும் எங்களோடு நீங்கள் வாழ்ந்த
அந்த பசுமையான நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் மறையாது

**அம்மா**
உங்கள் நினைவுகளோடு வாழும்..
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**
**60, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
31 - 10 - 1940



உதிர்வு
07 - 04 - 2023

## திருமதி ஈஸ்வரியம்மா குகரத்தினம்

மல்லாகம் சோடாக் கொம்பனி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரியம்மா குகரத்தினம் அவர்கள் நேற்று (07.04.2023) வெள்ளிக்கிழமை காலை சிவபதமெய்தினார்.

அன்னார் அமரர்களான வல்லிபுரம் பாக்கியம் தம்பதிகளின் செல்வப்புதல்வியும், அமரர் குகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான வெங்கடாசலம் பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட மருமகளும், பஞ்சலிங்கம், அமரர்களான செல்வலிங்கம், மகாலிங்கம், சுந்தரலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் ஆருயிர் அக்காவும், காந்தரூபன் (மல்லாகம்), கலைவாணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிந்துஜா, நவசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், விஷ்வினி, உசானி, கஜானி, துசானா, புவிசான், நிகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், அமரர்களான நாகேஸ்வரி, இராசரத்தினம், ஞானேஸ்வரி மற்றும் சண்முகரத்தினம் அமரர் சீவரத்தினம், மற்றும் பஞ்சலிங்கம், பவளராணி, செல்வரத்தினம், அமரர்களான செல்வராணி, இந்திராணி மற்றும் பாலாம்பிகை, அமரர் தவமலர் மற்றும் நகுலாம்பாள் ஆகியோரின அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக் கொம்பனி
கிழக்கு ஒழுங்கை,
மல்லாகம்.

(CS24348)(J-1)

தகவல்:
குடும்பத்தினர்
077 0422 844

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 04 - 1957



மறைவு
05 - 04 - 2023

## கதிரவேலு தவராசா

(மருதனார்மடம் சந்தை வியாபாரி)

கிளானை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் நவாலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தவராசா கடந்த (05.04.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் பூதாத்தை தம்பதியினரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கதிரவேலு பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், துஷிராஜ் (கண்ணா), கிரிராஜ் (கிரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (அன்னப்பொடி), நகுலேஸ்வரி (அம்மாளி), சிவராசா (சின்னண்ணை), தேவராசா (சின்ராசு), மற்றும் நகுலாண்டேஸ்வரி (தேவி), தவமலர் (தும்பி), சிவமலர், (கிளி பிரான்ஸ்), விஜயராசா (தேவன், பிரான்ஸ்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (கடவுள்) மற்றும் கதிரவேலு (பொல்காவலை), குகதாசன் (பாலு), சந்திரேஸ்வரன் (செல்வம்), இராஜேஸ்வரி, கிருஷ்ணமலர், இராஜேஸ்வரி, ஐசோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (நாவலி) நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

076 622 0735
077 501 6213

(CS 24345)(K-1)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## இராசரெத்தினம் பத்மநாதன்

(பிரபல வர்த்தகர்)

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராசரெத்தினம் பத்மநாதன் (பிரபல வர்த்தகர்) அவர்கள் நயினாதீவில் கடந்த (05.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான இராசரெத்தினம் கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், மோகனாதேவியின் அன்புக் கணவரும், கலைச்செல்வி (ஜேர்மனி), கலைவாணி, வித்தியாவதி, கஜேந்தினி, சுவர்ணலதா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - பூநகரி), கஜேந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ருதபாலன் (ஜேர்மனி), கமலஹாசன் (வர்த்தகர்), சுதாகரன் (வர்த்தகர்), சக்திவேல் (மின்சாரசபை நயினாதீவு), திருவாரூரன் (சிற்றி மெடிக்கல், யாழ்ப்பாணம்), மிலானி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னலெட்சுமி, செல்வராசா மற்றும் யோகநாதன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் மின்சாரசபை நயினாதீவு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற கந்தசாமி, புஸ்பராணி, சிவகௌரி மற்றும் லெட்சுமிதேவி, பன்னீர்ச்செல்வம் (சுவிஸ்), நாகேஸ்வரி (ஜேர்மனி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), காலஞ்சென்ற மகேந்திரன் (சுவிஸ்) மற்றும் யோகேஸ்வரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கம்ஷாயினி, லகீஷன், ரிஷிதா, அஷ்விதா, சுதர்ஷன், தர்சிகா, மகிஷாலினி, யதுஷாலினி, சக்திமேனன், தமிழ்க்கவி, வைஷ்ணவன் மற்றும் யோகிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஷாரூனின் அன்புப் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிதொடக்கம் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அன்னை மடியில்
24.10.1954

அம்பிகை திருவடியில்
05.04.2023



(CR 39621)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஜெயதாசன் காஞ்சனாதேவி



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், குளப்பிட்டிச் சந்தி ஆனைக்கோட்டை கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயதாசன் காஞ்சனாதேவி நேற்று (07.04.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரத்தினம், மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருளம்பலம், இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஜெயதாசன் (ஜெயம் மாஸ்டர்) இன் பாசமிகு மனைவியும், சங்கீதா, சுபஜீவனா, கஜானன் ( JK DREAMS STUDIO ) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இலங்காதேவி, ரதிதேவி, கெங்காதேவி, முருகமூர்த்தி, மேனகாதேவி (ஜேர்மனி), மீராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், விமலதாஸ், காருண்யா (AS BEAUTY) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஆர்யனின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஜெயம் மாஸ்டர்**
**077 900 5853**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தோற்றம் 18.04.1967 மறைவு 07.04.2023

(CS 24351)A-1


## சமையலாளர் தேவை

கோப்பாயிலுள்ள வீடொன்றில் இரவு தங்கியிருந்து சமையல் வேலைகளில் ஈடுபடக்கூடிய ஒருவர் தேவை.

**தொடர்பு –071 41 15 002**

## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதிசெய்த **புதிய நைட்டி துணிகள்** (2.90m) மலிவு விலையில் 925/- ரூபா விலையில் விற்பனையாகின்றன.

**33,35 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தி.**

**077 415 1947**


## போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், ஏப். 8

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சுன்னாகம் ஆலடிப் பகுதியில் சுன்னாகம் பொலிஸாருடன் இணைந்து நடத்திய தேடுதலின் போது 29 வயதுடைய சந்தேகநபரிடமிருந்து 36 உயிர்கொல்லிப் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோடு சந்தேகநபர் நீண்ட காலமாக உயிர்கொல்லி போதை மாத்திரை விற்பனையிலும் ஈடுபட்டு வந்தவரென்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ-26)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 . 01 . 1939



விண்ணில் 21 . 03 . 2022

அமரர் திருமதி **பூமணி மகேந்திரன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

**திதி: அபரபக்க திருதியை**

நீங்காத நினைவுகள் தந்து
நீண்டதூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
பார்த்த விழிகள் தேடுகின்றன
ஆறாது உங்கள் நினைவுகள்
அழியாது உங்கள் புன்னகை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

பிரதான வீதி, சங்கானை.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 06 . 1951



மறைவு 07 . 04 . 2023

## திருமதி அன்னலட்சுமி தனிப்புலிசிங்கமுதலியார்

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் பூதனடைப்பை வாழ்விடமாகவும் தற்போது யாழ். கந்தர்மடத்தில் வசித்து வந்தவருமான திருமதி அன்னலட்சுமி தனிப்புலிசிங்கமுதலியார் நேற்று (07.04.2023) வெள்ளிக்கிழமை கந்தர்மடத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான கந்தையா தனிப்புலிசிங்கமுதலியாரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் பாறுவதி தம்பதியின் சிரேஷ்ர புத்திரியும், காலஞ்சென்றவர்களான சுதேசவைத்தியர் கந்தையா(பரியாரி குஞ்சர்) பாறுவதி தம்பதியினரின் அன்பு மருமகளும், மகாலட்சுமி, நாகேஸ்வரி(வதனா-சுவிஸ்), சிவனேஸ்வரி(ஆசிரியை-யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கலியுகதேவி(கிளி-லண்டன்), கலைச்செல்வி(குஞ்சன்-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லோகதாசன் (கண்ணன்-சுவிஸ்), கருணாநிதி(பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்- கிளிநொச்சிப் பிராந்தியம்), சர்வானந்தசிவம்(கண்ணன்-லண்டன்), கருணாகரன்(கரன்-கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பைரவி (சுவிஸ்), பாரதி(சுவிஸ்), மயூரன்(யாழ் இந்துக் கல்லூரி), பிரவீனன்(யாழ் இந்துக் கல்லூரி), கஜானன்(லண்டன்), கபிலன்(லண்டன்), தேனுஜன் (கனடா), கிரித்திஜன்(கனடா), கனிசா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, விமலாதேவி, ஒப்பிலாமணி, காலஞ்சென்றவர்களான இலங்கேஸ்வரன், கிருஸ்ணதாஸ் மற்றும் சித்திரா, சறோசாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரின் கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 5878 126**

(CS 24353)(J-1)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்னோ இலகு வெற்றி



நேற்றையதினம் இடம்பெற்ற ஐ.பி.எல். தொடரின் பத்தாவது போட்டியில் சன் ரைசஸ் ஹைதராபாத் அணியுடனான ஆட்டத்தில் எளிதாக வெற்றி பெற்றது லக்னோ சுப்பர் ஜயன்ட்ஸ் அணி. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சன் ரைசஸ் அணி லக்னோ அணியின் பந்து வீச்சை சமாளிக்கமுடியாமல் ஆரம்பத்திலிருந்தே சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களை இழந்து மிக மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அன்மோல்பிரீத் சிங் 26 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்றார். விக்கெட் இழப்பைத் தடுக்க முற்பட்ட ராகுல் திரிபதி மற்றும் வாசிங்டன் சுந்தர் இணை அதிக பந்துகளை வீணடித்து ஓட்டங்களைப் பெற முயற்சி செய்தனர். திரிபதி 41 பந்துகளை எதிர்கொண்டு 35 ஓட்டங்களையும் சுந்தர் 28 பந்துகளில் 16 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். உனத்கட் வீசிய இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் அப்துல் சமத் இரண்டு சிக்ஸர்களைப் பெற்றுக்கொடுக்க முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 121 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது சன் ரைசஸ் - ஹைதராபாத். சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்திய லக்னோ அணி சார்பில் அதிகபட்சமாக குருனால் பாண்டியா 3 விக்கெட்டுக்களையும் அமித் மிஸ்ரா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

122 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய லக்னோ அணிக்கு சன் ரைசஸ் பந்து வீச்சாளர்களால் எந்தவொரு அழுத்தமும் வழங்கப்பட்டிராத நிலையில் அணித் தலைவர் ராகுல் மற்றும் குருனால் பாண்டியாவின் இணைப்பாட்டத்தின் உதவியுடன் 16 ஓவர்களில் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவு செய்தது லக்னோ அணி. பொறுப்பாக ஆடிய ராகுல் 35 ஓட்டங்களையும் குருனால் பாண்டியா 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அதில் ரசித் அதிகபட்சமாக 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். சகலதுறைகளிலும் பிரகாசித்த குருனால் பாண்டியா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ஒ-ரி1)

# போலித் தங்கமுத்துக்களை இலட்சத்துக்கு விற்ற கில்லாடி

முல்லைத்தீவு, ஏப். 8

புதுக்குடியிருப்பு- மூங்கிலாறைச் சேர்ந்தவருக்கு வெலிஓயாவில் வசிக்கும் ஒருவர் 35 இலட்சத்து 25ஆயிரம் ரூபாவுக்கு ஆயிரத்து 470 போலி தங்க முத்துக்களை விற்று ஏமாற்றிய சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு தொகைப் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

(அ-ஒ.19)

# தமிழ்–சிங்கள மீனவர்கள் மோதல்

திருகோணமலை, ஏப். 8

திருகோணமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருக்கடலூர் மற்றும் அதனை அண்டிய விஜிதபுர ஆகிய இரு கிராமங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள மீனவர்களுக்கிடையே நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 6 மீனவர்கள் திருகோணமலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் 9பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மீனவர்கள் தடை செய்யப்பட்ட சுருக்குவலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். அயல் கிராமத்தைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சுருக்கு வலையைப் பயன்படுத்த வேண்டாமெனக் கூறியுள்ளனர்.

இந்த விவகாரத்தில் இரு தரப்புக்கிடையிலும் வாய்த்தர்க்கம் முற்றி, கரையோரத்தில் மோதலாக மாறியது. இருதரப்பும் கற்கள், கொட்டான்களால் தாக்கிக் கொண்டுள்ளனர். இரண்டு தரப்பிலும் தலா 3 பேர் வீதம் 6 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களுக்கு பெரிய காயங்கள் எதுவுமில்லை என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலதிக பாதுகாப்புக்காக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அழைக்கப்பட்டனரெனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(அ-ஒ.இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 18.04.1936

மறைவு 06.04.2023

"சண்முகவாசம்"

இல.229, பருத்தித்துறை வீதி,

யாழ்ப்பாணம். 021 222 3590

## சிவசம்பு திருநாவுக்கரசு

காரைநகர், பலகாட்டைப் பிறப்பிடமாகவும், "சண்முகவாசம்" இல. 229, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட (ஈஸ்வரன் நிறுவன குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்) அமரர் சிவசம்பு திருநாவுக்கரசு அவர்கள் நேற்று முன்தினம் (07.04.2023) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான (தேவி) பரமேஸ்வரி, கனகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற நடராஜா (கூட்டுறவு பரிசோதகர்), சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், சிவகுமாரன் (யாழ்ப்பாணம்), சிவசோதி (இலண்டன்), காலஞ்சென்ற சிவபாலன், சிவராஜா (இலண்டன்), சிவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவமணி, சுசிலா (இலண்டன்), நந்தினி (இலண்டன்), துவாரகேஸ்வரன் (ஈஸ்வரன் நிறுவன குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், சாரங்கன் (பொருளியலாளர்), கஜலக்சன் (பொறியியலாளர்), துர்சி (இலண்டன்), துசன் (இலண்டன்), கஜிபன் (இலண்டன்), அனோயன் (இலண்டன்), அபிசன் (இலண்டன்), சஜிபன் (றைசன் பல்கலைக் கழகம் - கனடா), சரண் (கொழும்பு சர்வதேச பாடசாலை மாணவன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் காரைநகர் - பலகாடு -நீலங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

நேவிச்சந்தி - பலகாடு - காரைநகர்.

| | |
|---|---|
| சிவகுமாரன் (மகன் -யாழ்ப்பாணம்) | : 0094 762159238 |
| சிவராசா (மகன் -இலண்டன்) | : 0044 7957263011 |
| சிவசோதி (மகன் - இலண்டன்) | : 0044 7908192250 |
| துவாரகேஸ்வரன் (மருமகன்) | : 0094 777674119 |
| | 021 222 3590 |

(CR 39624)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர் விக்னேஸ்வரனின் நினைவேந்தல் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8

திருகோணமலையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் வ.விக்னேஸ்வரனின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி காலையில் வங்கிக்கு கடமைக்காகச் சென்று கொண்டிருந்த போது வங்கிநுழைவாயிலில் வைத்து விக்னேஸ்வரன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். இவர் அன்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பெயரிடப்படவிருந்த நிலையிலேயே கொல்லப்பட்டார்.

மாமனிதர் விக்னேஸ்வரனது 17ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். அலுவலகத்தில் நேற்று மு.ப. 10 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராஜா கஜேந்திரன் இதில் கலந்துகொண்டு திருவுருவப்படத்துக்கு சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்து நினைவேந்தலை ஆரம்பித்து வைத்தார். (அ-ஒ,26)



## யாழ்ப்பாணத்தில்...

டுள்ளதாக யாழ். வணிகர் கழகத் தலைவர் அ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரம் ஓரளவு சீரடைந்து வருகிறது. இதன் எதிரொலியாக எரிபொருள் மற்றும் அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்களின் விலைகள் குறைவடைந்துள்ளன. எரிபொருள் விலை குறைவடைந்துள்ளமையால் போக்குவரத்துச் செலவுகளும் குறைவடைந்துள்ளன. இவற்றைக் கருத்திற் கொண்டே யாழ். மாவட்டத்தில் தேநீர் மற்றும் பால் தேநீர், ரொட்டி ஆகியவற்றின் விலைகளை 10 ரூபாவால் குறைத்து விற்பனை செய்வதற்கு யாழ். நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளின் உணவக உரிமையாளர்களுடனான கலந்துரையாடலின்போது இணக்கம் எட்டப்பட்டுள்ளது.

தற்போது மரக்கறிகளின் விலைகளில் தளம்பல் நிலை காணப்படுவதால் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் மதிய மரக்கறி சோற்றுப் பார்சல்களின் விலைகளைக் குறைப்பதற்கும் கலந்துரையாடலின்போது சம்மதம் வெளியிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உலர் உணவுப் பொருட்களின் விலைகள் மேலும் குறைவடையும் பட்சத்தில் அதற்கேற்ப உணவகத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைக்கவும் இந்தக் கலந்துரையாடலில் இணக்கம் எட்டப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-ஒ,66)

## 80 வயதுப்...

செய்வதற்கு கோப்பாய் பொலிஸார் முயற்சிகள் மேற்கொண்டபோதும் அவர் தப்பித்துச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி மாணவர் விடுதியிலிருந்து சிறுமிகள் தப்பியோடியதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் மாணவர் விடுதியாகப் பதிவு செய்து சட்டவிரோதமாக இயங்கியமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து இல்லத்திலிருந்த சிறுமிகள் மீட்கப்பட்டு வேறு இல்லங்களுக்கு மாற்றப்பட்டனர். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மண் நிரப்பிய பைப்பால் அடித்து தண்டனை வழங்கப்படுவதாகவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது. அங்கு தங்கியுள்ள 80 வயது தலைமைப் போதகர் சிறுமிகளை தனியே அழைத்து அவர்களுடன் தகாதமுறையில் நடந்துகொண்டுள்ளமையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

விடுதியில் நடைபெறும் சம்பவங்கள் தொடர்பில் தாம் கற்கும் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்களிடம் தெரியப்படுத்தினால் அவர்கள் விடுதி நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்துவதால், தாம் தண்டனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் சிறுமிகள் தமது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஜெப ஆலயத்தின் மதபோதகர் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். தலைமைப்போதகரைக் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கைகள் எடுத்தபோதும் அவர் தப்பிச்சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ,5)

## சரக்குக்...

சேரியின் காரைக்கால் துறைமுகத்திலிருந்தா சரக்குக் கப்பல்சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் இன்னமும் இறுதிமுடிவு எடுக்கப்படாத நிலைமை நீடிக்கின்றது.

காரைக்காலுக்கும், காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல்சேவை எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பயணிகள் சேவையை முன்னெடுக்கும் கப்பல் நிறுவனம் இந்தியாவிலிருந்தே செயற்படவுள்ளது.

இதேவேளை - சரக்குக் கப்பல்சேவையை நடத்துவதற்கான அனுமதி இலங்கையைச் சேர்ந்த ஹேலீஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறை துறைமுகத்துக்கு தற்போதைய நிலைமையில் 350 மெற்றிக்தொன் எடையுள்ள பொருள்களை ஏற்றிய கப்பல்களையே கொண்டுவரமுடியும்.

சென்னை போன்ற துறைமுகங்களிலிருந்து பொருள்களைக் கொண்டு வரும்போது செலவு குறைவாகவும், காரைக்காலிருந்து கொண்டு வரும்போது செலவு அதிகமாகவும் இருக்கும் என்பதால், சென்னையிலிருந்து கப்பல்சேவை நடத்துவதையே வடக்கு வர்த்தகர்கள் விரும்புகின்றனர். இது தொடர்பில் இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இதனால் சரக்குக் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் இழுபறி நீடிக்கின்றது. (அ-ஒ,5)

## சைவச்...

நிறுத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்கள், இல்ல நிர்வாக கட்டடங்களுக்குச் சேதம் விளைவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சிறுவர்கள் என நான்கு பேரினது பெயர்கள் குறிப்பிட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் சைவவித்தியா விருத்திச்சங்கத்தின் தலைவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பெயர் குறிப்பிட்ட நான்கு பேரில் இருவரே அன்றைய தினம் முதல் காணாமற்போயுள்ளனர்.

சிறுவர் இல்லத்தில் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 12 சிறுவர்கள், சிறுவர் நீதிமன்றத்தால் சான்றுபெற்ற பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5)

## பிள்ளையாரை...

கட்டப்பட்டுள்ளது. அத்துடன் பிள்ளையார் ஆலயப் பகுதியில் அம்பாளை வழிபட்ட தடயங்கள் இருந்துவந்த நிலையில் அதனையும் பிக்குகள் நேற்று ஆக்கிரமித்துள்ளதாக மூதூர் இந்து குருமார் சங்கத் தலைவர் பாஸ்கர சர்மா தெரிவித்துள்ளார்.

200 ஆண்டுகள் பழமை வாய்ந்த பிள்ளையார் ஆலயம் இருந்த இடத்தில் விகாரை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அம்பாள் வழிபாடு நடைபெற்ற இடத்தை இந்துக்களுக்கு வழங்குவதற்கு முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்தது. இந்த நிலையில் அந்தப் பகுதியையும் சுத்தம்செய்து கிரியைகள் மேற்கொண்டு பிக்குகள் ஆக்கிரமித்துள்ளனர் என்று பாஸ்கர சர்மா குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ,இ)

## தேவாலயங்களுக்கு...

நேற்று மாலை முதல் உயிர்த்தஞாயிறு முடியும் வரை ஆலயங்களுக்கு வெளியில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்படுவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு உயிர்த்தஞாயிறு அன்று இலங்கையில் ஐ.எஸ். அமைப்பால் தற்கொலை குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,இ)

## நேரடி...

முகாமையாளர் இந்திபோலவே தெரிவித்தார்.

வடக்கு ரயில் மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப்பணிகளால், ஜனவரி 5 ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டை - காங்கேசன்துறைக்கு இடையிலான நேரடி ரயில் சேவை அநுராதபுரம் ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

வவுனியா முதல் காங்கேசன்துறை வரையிலான யாழ். ராணி ரயில் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், மார்ச் 27ஆம் திகதி முதல் அது ஓமந்தை வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டது.

இங்கு முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை ஜூலை மாதமளவில் முன்னெடுக்கப்படும். எனினும், அநுராதபுரத்தில் இருந்து மஹோ சந்தி வரையிலான ரயில் மார்க்கத்தில் மற்றுமொரு திருத்தப்பணி ஜூலை மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படவுள்ளதால், ஜனவரி மாதத்திலேயே கொழும்பு கோட்டை - காங்கேசன்துறை நேரடி ரயில் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் - என்றார். (அ-ஒ,இ)

## இன்னும்...

மருந்துகளை விற்பனை செய்யும் நடவடிக்கைக்கும் செல்லவேண்டும். இதேவேளை - மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி, அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற செயற்படும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, 90 சதவீதமானோர் ஒத்துழைப்பு வழங்குவதை, சமூக ஊடகங்கள் வாயிலாக காண்கின்றேன்' என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (அ-ஒ,இ)

## வழிபாட்டுச்...

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வடக்கில் மத ரீதியில் அண்மைக்காலத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும். இந்தப்பிரச்சினைகளை வைத்து அல்லது பிரச்சினைகளை மேலும் தூண்டிவிட்டு எவரும் அரசியல் இலாபம் தேட முயலக்கூடாது.

நீதிமன்ற வழக்கில் ஒரு பிரச்சினை இருந்தால் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கமைய அரசு நடவடிக்கை எடுக்கும். எனினும், வடக்கில் மத ரீதியில் எழுந்துள்ள பிரச்சினைகளை வளர விடாமல் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் நேரில் விரைந்து தீர்வு காண்போம் - என்றார். (அ-ஒ,22)


பொருளாதார நெருக்கடியால் மேலதிக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு விரும்புவரா

நீங்கள்?

உங்களுக்கான பகுதி நேர வேலை வாய்ப்பை வழங்குகின்றோம்.

முன்னணி ஊடகம் ஒன்றில்,

1. உதவி ஆசிரியர்கள்
(இரவுக் கடமை ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். வீட்டிலிருந்து பணியாற்ற முடியும்)

2. செய்தியாளர்கள்

3. பக்க வடிவமைப்பாளர்கள்
(இரவுக் கடமை ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். வீட்டிலிருந்து பணியாற்ற முடியும்)



வேலை வாய்ப்பு

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை. தகுதி விரும்புவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்களது சுயவிவரக் கோவையை coljoujob@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(cs 49884)(N-1)

**076 342 4705**

## வீட்டுப்பணிப்பெண் தேவை

வீட்டு பராமரிப்பு, சமையல் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும்.

(cs 243391)(N-1)

**075 980 8444**


## நாகதம்பிரான் பொங்கல் இரண்டு திருடர்கள் கைது

கிளிநொச்சி, ஏப். 8

கரைச்சி புளியம்பொக்கணை ஆலய பொங்கல் உற்சவத்தின்போது ஓட்டோ மற்றும் தங்கச்சங்கிலிகள் அபகரிக்கப்பட்ட குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொங்கல் உற்சவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றபோது பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி அறுத்தெடுக்கப்பட்டது என முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய கைதுசெய்யப்பட்ட பெண்ணிடமிருந்து இரண்டு தங்கச்சங்கிலிகளை பொலிஸார் மீட்டனர்.

அதேவேளை உற்சவத்தில் ஓட்டோ ஒன்று களவாடப்பட்டுள்ளது என பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபரை பொலிஸார் கைதுசெய்ததுடன் ஓட்டோவையும் மீட்டனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-113)

## கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஏப். 8

உடுவில் பிரதேச செயலகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு ஆகியவை இணைந்து நடத்தும் விற்பனைச் சந்தையும் கண்காட்சியும் நாளைமறுதினம் திங்கட்கிழமை மற்றும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வு உடுவில் பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபைக்கு முன்பாக நடைபெறவுள்ளது.

(ச-66)


## English Classes

Grade - I to O/L

**Grammar With Spoken**

(வீடு வந்து கற்பிக்கப்படும்)

T.P.: 077 331 4608

(cs 49880)(N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிலையமொன்றிற்கு பின்வரும் பணியாள்கள் தேவைப்படுகின்றன.

- ✔விற்பனை பிரதிநிதி
- ✔பண வசூலிப்பாளர்

**076 009 4946**

## வேலையாள்கள் தேவை

நிறுவனம் ஒன்றில் பணியாற்றுவதற்கு அனுபவமுள்ள



1. எலக்ரீசியன் Electrician
2. பிளம்பர் Plumber
3. வெல்டர் Welder

ஆகியோர் தேவை.

தொடர்பு 0771209998

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 7390 413, 076 4365 814

## வாடகைத்தாய் தேவை

தனது கருப்பையால் சுமந்து பெற்றெடுத்துக்கொள்ள முடியாத தாய்க்கு IVF மூலம் இந்தியாவிற்கு சென்று இலங்கையில் குழந்தை பெற்றெடுப்பதற்கு வாடகைத்தாய் தேவை.

(இரகசியம் பேணப்படும்)

(CS24207)(J-1)

**077 699 9021**

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் (200.000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- **076 733 6047, 076 333 6079 076 733 6093**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.

### நிலப்பரப்பு

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: **076 755 8606 077 6385 683**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✔ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✔ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✔ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✔ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

### நிலப்பரப்பு

- ✔ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✔ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✔ காய்க்கும் தென்னைகள் 48 உள்ளன.
- ✔ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

(CS 24346) (J-1)


## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 07 . 1946 — மறைவு 06 . 04 . 2023

## சிவபுஸ்பம் சிவசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை – இணுவில் மத்திய கல்லூரி)

இணுவில் மேற்கு, வட்டுவினியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சிவபுஸ்பம் சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை - இணுவில் மத்திய கல்லூரி) கடந்த (06.04.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், தாவடி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிவசம்பு - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதி அதிபர் / பதில் அதிபர் - தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும், சிவரூபன், சிவானி, சிவமயூரன், சிவரஞ்சன், சிவதர்சினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தவதனி, அன்பழகன் (விம்போ), மைதிலி, செல்வராஜா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நடராசா, நாகராசா, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், இராசரத்தினம், கமலாதேவி மற்றும் இராசலட்சுமி (லீலா), இரத்தினேஸ்வரி (ஈசு), கமலாம்பிகை, சுகிர்தாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சங்கரசிவம்பிள்ளை நாகேஸ்வரி, நாகேஸ்வரன் மற்றும் மனோகரன் ஆகியோரின் அன்புச் சகலியும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, சின்னத்தம்பி ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் கனகலிங்கம், கணேசலிங்கம், கமலாதேவி, யோகரத்தினம், நாகேஸ்வரி, ரத்தினேஸ்வரி ஆகியோரின் மச்சாளும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், இராசரத்தினம், இராசமணி, இராஜேஸ்வரி (சின்னமணி) மற்றும் கனகமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், ஆதீசன், ஆருஷன், அபிஷயன், அட்சயா, அரன், கவிஷன், ஜஸ்விகா, யுதாசினி, சுஜானா, சரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS/49906)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...த்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.